# திராவிட மொழிகளும் உட்பிரிவுகளும்:

குறிப்புச்சட்டகம்:

* திராவிட மொழிகளும் உட்பிரிவுகளும்
* தென்திராவிட மொழிகள்
* நடுதிராவிட மொழிகள்
* முடிவுரை:

## முன்னுரை:

திராவிட என்ற வடசொல்லுக்கு மூன்று வடிவங்கள் உள்ளன. பாரத மொழிகளைத் தொகைப்படுத்திய ஆய்வாளர்கள் தென்னிந்திய மொழிகளைத் "திராவிட" என்னும் பெயரால் குறிக்கின்றார். அதனை குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

## திராவிடம்:

பேராசிரியர் J.J ஜீன் என்பவர் தமது நூல் ஒன்றில் "திராவிடம் ஒரு சிறு பராகிருதம்" என்று வடமொழி ஆய்வாளர் குறிப்பிடுகின்றார். S.K சட்டர்ஜி இடைக்காலத்தில் பிராமணர்கள் "பஞ்ச திராவிடா" என்று திராவிடம் என்ற சொல்லை பயன்படுத்துகின்றார். பாபு இராஜேந்திரலால் "திராவிட" என்ற பெயரால் தென்னிந்திய மொழிகளை அழைக்கிறார். பாடலாலும் திராவிடம் என்ற சொல் பரந்த நிலையிலே ஆளப்படுகிறது

## மக்களும் மொழியும்.

இந்தியாவில் ஆஸ்ட்ரிக் குடும்பம், இந்தோ-ஆரிய மொழிக் குடும்பம், திபெத்தோ-சீனமொழிக் குடும்பம் திராவிட மொழிக் குடும்பம் என்ற நான்கு மொழி குடும்பங்கள் உள்ளன.

திராவிட மொழிகள் உராலிய குடும்பத்தோடு நெருங்கிய உறவு கொண்டுள்ளன என்பதை டாக்டர் கால்டுவெல் போன்றோர் குறிப்பிடுகின்றார்.

Edit with WPS Office

திராவிட மொழிகள் விந்தியமலைக் கடந்த பகுதிகளிலும் பல மொழிகளாகும், திராவிட மக்கள் விந்தியமலைக் கடந்தபகுதி மக்களாகவும் நிலைகளில் சுருங்கிய உறவு கொண்டுள்ளனர்

## தென் திராவிட மொழிகள் :

தமிழ், மலையாளம், இருளா, கொடகு, தோடா, கன்னடம், படகா, துளு, ஆகிய ஒன்பது மொழிகளும் தென் திராவிட மொழிகள் என்று கருதப்படுகின்றன.

L.V இராமசாமி ஐயர் கொடகு மொழிதான் தென்திராவிட மொழிகளின் தமிழ் மலையாள மொழிகளுக்கடுத்த நிலையில் உறவுடையது

தோடகோடா போன்ற மொழிகளும் நீலகிரி மலைப் பகுதிகளில் உள்ள பழங்குடி மக்களால் பேசப்படுகின்றன

கன்னடம், துளு, கொடகு கர்நாடக பகுதிகளில் பேசப்படுகின்றன. துளு மொழி 1798 - ஆம் ஆண்டில் பேராசிரியர் R.E ராபர்ட் என்பவரால் தனிமொழி என்று சுட்டி காட்டப்பட்டது. 1837 தோடா மொழி தனி மொழி என்று தெரியவந்தது

தென் திராவிட மொழிகள் முதலில் தமிழ் - கன்னடக்கிளை என்றும் துளு பிரிந்திருக்க வேண்டும்.

பின்னர் * தென்திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்

* தென்திராவிட மொழிகளில் தமிழ் சிறப்பியல்புகள்
* பேசப்படும் பகுதி
* தமிழும் திராவிடமும். தமிழ் மக்களாலும் பேசப்படுகிறது.

தமிழ், மலையாளம், கன்னடம், தேவாங்க கன்னடம், கௌடா கன்னடம், படகா, துளு, கொடகு, தோடா, கோடா, இருளா போன்ற மொழிகளை குறித்து தென்திராவிட மொழிகளில் விரிவாக பேசப்படுகிறது.

Edit with WPS Office

முன்னுரை:-

பிராகுயி, மால்டோ, குருக் ஆகிய மூன்று மொழிகளும் வட திராவிட மொழிப்பிரிவில் அடங்கும். தற்போது ஆந்திரப் பகுதிகளில் வழங்கும் கோயா என்ற மொழியைத் தனி மொழி என்று கண்டு அதனையும் வட திராவிட மொழியோடு இணைத்துள்ளனர். இதனை குறித்து காண்போம்.

வட திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்:-

1. மூலத் திராவிட ஒலியான 'க' கரம் மொழி முதலில் இ, ஈ, தவிர்ந்த உயிர்களின் முன்னர் வரும்போது வட திராவிட மொழிகளில் அது 'ஹ' கர ஒலியாக (x) மாறி இருக்கின்றது, இம்மாற்றத்தை உரசொலியாதல் (Fricativisation) என்பர்.

(எ.கா) தமிழ் - kan
மால்டோ - xvanu
பிராகுயி - xan
குருக் - xann

2. மொழி முதலில் இடம் பெறும் மூலத் திராவிட ஒலியான வ (*v) இம்மொழிகளில் 'b' ஒலியாக மாறும்.

(எ.கா) தமிழ் - vāy
குருக் - bai
பிராகுயி - bā

Edit with WPS Office

3. மொழி முதலில் வரும் 'ச' கர ஒலி உ, எ, ஊ, ஏ ஆகிய உயிர்களின் முன்னர் இம்மொழிகளில் 'க' கர ஒலியாக மாறுகின்றன,

(எ.கா) தமிழ் - சுடு

குருக் } Kur
மால்டோ

## திராவிட மொழிகளின் ஒப்பாய்வு

4. குருக் மால்டோ மொழிகளில் தன்மை ஒருமை முன்னிலை ஒருமை சுட்டுப் பெயர்களின் வேற்றுமை ஏற்கும் வடிவங்கள் நான்காம் வேற்றுமை வடிவங்களாகவே உள்ளன.

5. இம்மொழிகளில் முறையே இறந்தகால இடைநிலையாக -க்-கும் (*-k-) எதிர்கால இடைநிலையாக -ஒ-வும் (-o-) உள்ளன.

* வட திராவிட மொழிகளுள் பிராகுயி தனியே பிரிந்திருக்க வேண்டுமென்றும், குருக் மால்டோ ஆகிய இரண்டும் நெடுங்காலம் இணைந்து நின்று பின்னர்க் காலப்போக்கில் தனி மொழிகளாகப் பிரிந்திருக்க வேண்டுமென்றும் தெரிகிறது.

Edit with WPS Office

*1961-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இம் திராவிட மொழிகளைப் பேசுவோரின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு உள்ளது.

1. குருக் - 11.4 இலட்சம்
2. மால்டோ - 70 ஆயிரம்
3. பிராகுயி - 3 இலட்சம்.

குருக்:-

* இம்மொழியை டாக்டர் கால்டுவெல் 'ஒராவோன்' என்று குறிப்பிடுகின்றார். இம்மொழியைப் பேசும் மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 11.4 இலட்சம் உள்ளது. இவர்கள் பீகார், அஸ்ஸாம், வங்காளம், மத்தியப் பிரதேசம், ஆகிய பகுதிகளில் பரந்து காணப்படுகின்றனர். பேராசிரியர் கொலானல் டால்டன் (Colonel Dalton) இம்மக்களைப் பற்றிய குறிப்புகளை 'வங்காள மக்களின் வரலாறு' (Ethnology of Bengal) என்ற நூலில் தருகின்றார். F. பட்சர் என்னும் பாதிரியார் (Rev. F. Batch) இம்மொழிக்கு இலக்கணம் எழுதியுள்ளார். இம்மக்கள் கொங்கணத்திலிருந்து வந்ததாகவும், பாடலிபுர மலைகளில் வாழ்ந்ததாகவும் கூறிக்கொள்கின்றனர். இம்மக்களுக்கும் மால்டோ மொழி பேசும் மக்களுக்கிடையே நெருங்கிய தொடர்புள்ளதாக டாக்டர் கால்டுவெல் கூறிச் சென்றுள்ளார்.

Edit with WPS Office

இம்மொழிக்குரிய அகராதி ஒன்றினையும் இலக்கணநூல் ஒன்றினையும் 1924-ஆம் ஆண்டில் பேராசிரியர் A.கிரிக்னார்ட் (A. Grignard) என்பவர் தயாரித்து வெளியிட்டுள்ளார். மேலும் Ferd-Hahn என்பவரும் C.B.Lees என்பவரும் இம்மொழிக்குரிய அகராதியைத் தயாரித்துள்ளனர்.

வடத் திராவிட மொழிகள்:-

மால்டோ:-

* இம்மொழியை ஏறத்தாழ 90 ஆயிரம் மக்கள் பேசுகின்றனர். இவர்கள் பீகார், மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகளில் வாழ்கின்றனர். இதன் சொற்கள் பலவற்றை பேராசிரியர் B.H ஹாட்ஜ்ஸன் (B.H. Hodgson) கேம்பல் (Sir George Campell) போன்றோர் தொகுத்துள்ளனர். இம்மொழி ஆய்வுக்கு 'மால்டோ' மொழி அறிமுகம் '(Introduction to the Malto language) என்ற நூல் பெரிதும் துணை செய்கின்றது.

* இம்மொழியைப் பேசும் மக்கள் தங்களை 'மாலர்' (மனிதர்கள்) என்று அழைக்கின்றனர். இம்மொழியை ஆய்ந்த கிரியர்ஸன். மாலர் என்னும் சொல் மலை என்னும் சொல்லின் அடியாக பிறந்தது என்றும், மாலர் என்பது மலை மனிதர்கள் என்றும் பொருள்படும் என்றும் குறிப்பிடுகின்றனர். இம்மொழிக்கு இலக்கிய வளம்

Edit with WPS Office

தையாது. எனினும் கிறிஸ்தவத் தொண்டர்கள் பலர் இம்மொழியில் பல இலக்கியங்களைப் படைத்துள்ளனர்.

* தடையொலிகள் (stops) உரசொலிகள் (Fricatives) மூக்கொலிகள் (Nasals), உருட்டொலிகள் (Trills), மருங்கொலிகள் (Laterals), ஆடொலிகள் (Flaps), இடையினங்கள் (Semi-vowels) என்று இம்மொழிகளில் உயிர்ப்பொலிகள் (Aspirated stops) இடம் பெறவில்லை.

பிராகுயி :-

* பலுசிஸ்தான் பகுதிகளில் பேசப்படும் பிராகுயி மொழியினை டாக்டர் கால்டுவெல் குறிப்பிட்டுச் சென்ற போதிலும் அதைத் திராவிட மொழிக் குடும்பத்தில் இணைத்து தெளிவாக ஆராயவில்லை. டென்னிஸ். டி. எஸ். பிரே என்பவர் பிராகுயி மொழியைத் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழி என்று நிறுவினார். பேராசிரியர் எமனோ 1962-ஆம் ஆண்டில் பிராகுயி மொழி வட திராவிட உட்பிரிவைச் சார்ந்தது என்று தெளிவாக விளக்கினார். மூலத் திராவிட மொழியிலிருந்து முதல் நிலையில் பிரிந்த மொழி பிராகுயி மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது. திராவிட மக்களும் பிராகுயி மக்களும் ஒரே இனத்தவர் என்று கொள்வதற்கு ஏற்புடைய சான்றுகள் இல்லை.

Edit with WPS Office

நடுத் திராவிட மொழிகள் :-

* நடுத்திராவிட மொழிகளை தெலுங்கு - குவி களை என்றும் கொலாமி நாயக்கி களை என்றும் மொழிநூலார் இரு கூறுபடுத்துவர். தெலுங்கு - குவி களையில் கோண்டி, கோண்டா, குயி, குவி, பெங்கோ, மண்டா, ஆகிய ஏழு மொழிகள் உள்ளன.

* பல்வேறு வகையான நடுத் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகளை அதிகமாக பேசப்படுகின்றன.

* நடுத்திராவிட மொழிகளில் தெலுங்கு, தொன்மைச் சிறப்பாலும் சொல்வளத்தாலும் தெலுங்கு மொழியை தமிழுக்கு அடுத்த நிலையில் குறிப்பிடலாம். 'ஆந்திர தெலுங்கு', 'களா தெலுங்கு' போன்று பல உள்ளன.

* கோண்டி மொழி பேசும் மக்கள் கோண்டுவனம் என்று அழைக்கப்படும் நடு இந்தியாவின் காடுகளில் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்

* குவி (அ) கோந்த் இம்மொழி பேசும் மக்கள் கோண்டவனத்தின் பகுதிகளிலும் ஒரிசாவிலுள்ள மலை குன்றுகளிலும் வாழ்கின்றனர்

* குயி மொழி ஒரிசாவிலும், கோராபுத் மாவட்டப் பகுதிகளிலும் பேசப்படுகின்றது. இம்மொழி இலக்கணத்தை W.W. வின்ஃபீல்டு குறிப்பிடுகிறார்

* கோண்டா மொழியைப் பற்றி Dr. கிருஷ்ணமூர்த்தி ஆராய்ந்து பல கட்டுரைகள் வெளியிட்டுள்ளார்.

* கொலாமி 50 ஆயிரம் மக்கள் பேசி வருகின்றனர். எமனோ 1955 ஆம் ஆண்டில் சிறந்த கட்டுரையை வெளியிட்டுள்ளார்

* நாயக்கி பர்ஜி மகாராஷ்டிரத்திலுள்ள பல பகுதிகளில் பேசப்படுகிறது

* கடபா ஒல்லாரி, கடபா சல்லூர் ஆகிய இரண்டையும் ஒரு மொழியாக இவர் கொள்கின்றனர்

* பெங்கோ, மண்டா என்பன தனிமொழியாக குறிப்பிடப்படுகின்றன

முடிவுரை :-

இதனை அறிவதற்கு திராவிடமொழி குடும்ப வரலாறு சிறப்பாக கூறப்படுகிறது.

Edit with WPS Office